# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காரைக்குடியில் உற்சாக வரவேற்பு!











காரைக்குடிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (21.1.2025) சாலையின் இருமருங்கிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### கிராமப்பகுதிகளில் வாழும்

## பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

### அரிமளத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை. ஜன.23-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 20.01.2025 அன்று திறந்து வைத்து, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.



பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்பகுதிகளில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கிராமப்புறங்களுக்குத் தேவையான சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி பொன்னமராவதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு பணிகள் திறந்து வைத்து, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டுமானப் பணி அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், மேலசிவபுரி கல்லான்சரலை, தொட்டியம் பட்டி காமராஜர் நகர், இந்திராநகர் பள்ளிவாசல் பின்புறம், உலகம்பட்டி மெயின்ரோடு அருகில் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றிகளையும், பொன்னமராவதி அரசு போக்குவரத்துப் பணிமனையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள போக்குவரத்து கழக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோர் தங்குவதற்கான ஓய்வுக் கூடம் கட்டிடத்தினையும், கீழத் தானியத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், அரசமலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக்குழு கட்டிடத்தினையும், நெருஞ்சிகுடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கே.புதுப்பட்டி, நயாரா பெட்ரோல் பங்க் அருகில், சமுத்திரம் ஊராட்சி, தஞ்சாவூர் காமண்டி திடல், கீழப்பனையூர் ஊராட்சி, காமாட்சிபுரம் இந்திரா செல்வம் மண்டபம் பின்புறம், ஓணாங்குடி சிவகமலம் வீடு அருகில் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளையும், கைக்குலான்வயல் ஊராட்சி, கே.புதுப்பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை கட்டிடத்தினையும், சமுத்திரம் ஊராட்சியில், புதிதாக கட்டப்பட்டுள்ள தாஞ்சூர் கூட்டுறவு பால் கொள்முதல் நிலைய கட்டிடத்தினையும், ஓணாங்குடி ஊராட்சி, சத்திரம் மற்றும் மிரட்டு நிலை ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடங்களையும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், புதிதாக கட்டப்படவுள்ள ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டுமானப் பணி அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணியினை விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்களின் நலன் காக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டுவரும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்வில் முன்னேற வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், வருவாய் கோட்டாட்சியர்கள் ச.சிவக்குமார் (அறந்தாங்கி), அ.அக்பர்அலி (இலுப்பூர்), பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, பொது மேலாளர் (த.அ.போ.க.) கே.முகமது நாசர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அ.ஆயிஷா ராணி (பொன்னமராவதி), சரவணராஜா (அரிமளம்), எஸ்.கருணாகரன் (ஆவுடையார்கோவில்), ஏ.வீரையன் (ஆவுடையார்கோவில்), திருமயம் வட்டாட்சியர் புவியரசன் மற்றும் எஸ்.ஜெயராமன், பொன்.இராமலிங்கம், அ.அடைக்கலமணி, இரா.கணேசன், வி.ஆர்.இளையராஜா, அ.அழகப்பன், மேகலா முத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரியில் அ.தி.மு.க., நா.த.க, பா.ஜ. உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 1300 பேர், அக்கட்சியில் இருந்து விலகி அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். அருகில் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் உள்ளனர்.

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் கோவி.செழியன் -- சூர்யா வெற்றிகொண்டான் உரையாற்றுகின்றனர்.

## தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன.23-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினைஏற்று தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டம் கும்பகோணத்தில் நடைபெற உள்ளது. இதில் கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

இந்தி திணிப்பை எதிர்த்து உயிர்நீத்த மொழிப்போர்த் தியாகிகளை நினைவு கூர்ந்து பெருமைபடுத்தும் விதமான திராவிட முன்னேற்றக் கழகம் வருடா, வருடம் ஜனவரி 25 ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களை மாணவர் அணியின் சார்பில் நடத்தி வருகிறது.

அதனைத் தொடர்ந்து வருகின்ற 25.01.2025 மாலை 06.00 மணியளவில் கும்பகோணம் மார்னிங் ஸ்டார் பள்ளி அருகில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மாபெரும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான் ஆகியோர் வீரவணக்க உரையாற்று கின்றனர்.

அதுசமயம் இக்கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி கோட்டை பகுதி 36 மற்றும் 37 வது வார்டு மில் வீதி, காந்திபுரம் குடிசை பகுதி, சுப்பையன் வீதி, வரகப்பா வீதி, ஜானகி அம்மாள் லே அவுட், ராஜாஜி புரம், குப்பக்காடு, கந்தசாமி வீதி , சுல்தான்பேட்டை, கொங்கலம்மன் கோவில் வீதி, ஆர்.கே.வி. ரோடு, மணிக்கூண்டு, திருவேங்கடம் வீதி, என்.எம்.எஸ். காம்பவுண்ட், காமராஜர் வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, வெங்கடாசலம் வீதி, பிருந்தாச்சாரியா வீதி, கோவலன்வீதி, சத்தி ரோடு, ஏபிடி ரோடு ஆகிய இடங்களில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ், மேயர் நாகரத்தினம் சுப்ரமணியம், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.